IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.361/2023

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | HARISH |
| FATHER'S NAME | : | RAMESH |
| VILLAGE | : | PERNAMBUT |
| OCCUPATION | : | MECHANIC |
| AGE | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of October 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது நண்பர் ஆவார். கடந்த 16.07.2022 அன்று இரவு 10.00 மணியளவில் மத்தூர் கிராமத்தில் பாட்டு கச்சேரி நடந்து கொண்டிருந்தபோது அங்கிருந்த ஆஜர் எதிரி என்னை டேய் லவட எங்க ஏரியா பொன்னை லவ் பன்றியா அசிங்கமாக திட்டி கத்தியால் வலது பக்க வயிற்றில் குத்தினார். பின்னர் எனது அண்ணன் சந்தோஷ்குமாருக்கு போன் செய்து தகவல் சொல்லி அவர் என்னை பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்தார். பின்னர் மேல் சிகிச்சைகாக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிசசையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.